

# அமரர்
# சின்னத்தம்பு சொர்ணலெட்சுமி



## அவர்களின் சிவபதப்பேறு குறித்த
# நினைவு மலர்

25.09.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அமரர்

# திருமதி. சின்னத்தம்பு - சொர்ணலெட்சுமி

**வேலணையூரின் சைவவேளான் மரபில்**
**தோன்றி தம்பகாமம் பளையில் வசித்த**
**திருமதி சின்னத்தம்பு - சொர்ணலெட்சுமி**
**அவர்களின் சிவபதம் பேறு குறித்த**

# நினைவு மலர்

## 25.09.2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

**எங்கள் நலம் கருதி அல்லும் பகலும் அயராது உழைத்து எம்மை எல்லாம் நல்லபடி வளர்த்து வையம் போற்ற வாழ வைத்த எம் தாயாரின் திருவடிகளிலே இம் மலரை சமர்ப்பித்து சிரம் தாழ்த்தி கரம் கூப்பி வணங்கி கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம்.**

## ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



**இங்ஙனம்**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

தம்பகாமம்,
பளை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



அமரர்

# சின்னத்தம்பு சொர்ணலெட்சுமி

தோற்றம்
12.10.1929

அவர்களின்

மறைவு
25.08.2019

## திதி வெண்பா

ஆண்டு விகாரி ஆவணித் தேய்பிறைக்காலம்
பூண்ட தசமித் திதியில் - ஈண்டெங்கள்
சொர்ணலெட்சுமி திருக்கண்ணகையம்மன்
பொன்னடியைச் சேர்ந்தார் பொலிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

உச்சியின் மகுடமின்ன ஒளிர்தர நுதலினோடை
வச்சிர மருப்பின் ஒற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச் செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகட சக்கரக் கணபதிக் கன்புசெய்வோம்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோர்கள் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

நத்தார் படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும்பணிவான் திருக் கேதீச்சரத் தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

கடையவ னேனெனைக் கருணையினாற்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டுடிதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தரகோச
மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வ கூத்து கந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் முணர்ந் தோதுதற் கரியவன்
நிலவுலா விய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கும் முக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருள வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்
திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மன்

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்து அரசரோ டென்னைச்
சரியாசனம் வைத்த தாய்

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப் பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப் பளிங்கு வாராதிடர்

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனைவரதமும் தொழுநாற்
கல்லும் சொல்லாதோ கவி

## முருகன்

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரை நான் பின் செல்கேன் - பன்னிருகை
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே

நாளென் செயும் வினைதான் என் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங் கொடுங்கூற்றென் செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமும்
தோளுங் கடம்பு மெனக்கு முன்னே வந்து தோன்றிடிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ குமரகுரு பரசுவாமிகள் அருளிச்செய்த

# சகலகலாவல்லி மாலை

## கட்டளைக் கலித்துறை

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்க என்வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசகம் ஏழும்மளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்(து)
ஆகஉண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே! 01

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே! 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கும் செழுந்தமிழ் தெள்ளமு
தார்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே! 03

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்தா விளின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!. 04

பஞ்சப்(பு) பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்(து) அல ராததென்னே?
நெடுந் தாட் கமலத் (து)
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் (து) திருந்தாய்
சகல கலாவல்லியே! 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய், எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே! 06

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்
காய், உள்ளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே! 07

சொல்விற் பனமும் அவதானமும்
மும்கவி சொல்லவல்ல
நல்வித்தை யும்தந்து அடிமைகொள்
வாய், நளி னாசனம் சேர்
செல்விக்(கு) அரிதென்(று) ஒருகால
மும்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே! 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே! 09

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பன்கண் டளவிற் பணியச் செய்
வாய், படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே! 10





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணையூரை பிறப்பிடமாகவும் தம்பகாமம் பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சைவவேளாள் தொல்குடித் தோன்றல் திருமதி சின்னத்தம்பு சொர்ணலெட்சுமி அவர்களின் சிவபதப்பேறு குறித்த வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திரு நாட்டின் வடபால் சப்த தீவுகளில் ஒன்றாய் திகழும் வேலணை கிராமத்தின் 5 ம் வட்டாரத்தில் சைவவேளாள் குடித் திலகங்களாக விளங்கிய தம்பாப்பிள்ளை நாகம்மா தம்பதியினருக்கு மகளாக 12.10.1929 இல் அவதரித்தார். இவரது தந்தையார் தம்பாபிள்ளை அக்காலத்தில் பிரபலமான வியாபாரி ஆவார். உடன் பிறப்புக்களாக அன்னலெட்சுமி, இராசலெட்சுமி, செல்வலெட்சுமி, நித்த நாயகம், சண்முகவடிவு ஆகியோரும் மண்ணில் தோன்றி மகிழ்வித்தார்கள்.

பெற்றோரின் செல்வமகளாக வளர்க்கப்பட்ட சொர்ணலெட்சுமி அவர்கள் தனது ஐந்து வயதில் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியை கற்று பின் யாழ் இந்து மகளீர் கல்லூரி, மற்றும் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்தில் விஞ்ஞான துறையில் கல்வி கற்று SSC சிரேஸ்ட பாடசாலை சான்றிதழை பெற்றார். இதனைத் தொடர்ந்து 1949 ம் ஆண்டு கண்டி வெரண்டிக் கொலிக்ஸ் மற்றும் குமுக்கந்துறை முஸ்லீம் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியராக இணைந்து கடமையாற்றினார்.

ஆசிரியராக கடமையாற்றிய வேளையில் 1958 இல் ஆசிரியர் சேவையில் நின்று நீங்கினார். 24.11.1955 ஆம் ஆண்டு தமது இருபத்தைந்தாவது வயதில் இல்லறத்தில் புக விரும்பி பளை-தம்பகாமத்தை சேர்ந்த வேலுப்பிள்ளை முத்துப்பிள்ளை தம்பதியினரின் புதல்வன் சின்னத்தம்பு ஆசிரியரை பெரியோர் ஆசீர்வாதத்துடன் திருமணம் செய்து இல்லற வாழ்வினை ஆரம்பித்து மாமனார் போற்றும் மருமகளாகவும் வாழ்ந்து மாமனாரின் அந்திம காலத்தில் மகளாகவே பணி விடை செய்தார்.

"மங்கலமென்பது மனமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கள் பேறு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய ஜெயராசா(ராசா), புவனராசா (புவனா) தர்மராசா (கருணா), வதனராசா(வதனா) ஆகிய நான்கு புதல்வர்களை பெற்றெடுத்து அன்பாய் வளர்த்து நன்மக்களாக வாழ வழி வகுத்த உத்தமர்.

புத்திரர்களில்,

ஜெயராசா - ஓய்வுநிலை தாதிய உத்தியோகத்தர்
யாழ் போதனா வைத்தியசாலை
புவனராசா - ஓய்வுநிலை நிர்வாக கிராம உத்தியோகத்தர்
தர்மராசா - உதவிக்கல்விப்பணிப்பாளர் - தென்மராட்சி
வதனராசா - ஆசிரியர் கிளி /பளை மத்திய கல்லூரி

இவ்வாறு புத்திரர்களின் உயர்வுகளைக் கண்டும் மகிழ்ந்தார்.புதல்வர்கள் நால்வரினதும் திருமணங்களை இனிதே நிறைவேற்றி இன்புற்றார். ஜெயராசாவுக்கு ஊரெழு கந்தவனநாதன் அன்னபூபதி தம்பதிகளின் புதல்வி ரூபியையும் (ஓய்வு நிலை தாதிய உத்தியோகத்தர் ), புவனராசாவிற்கு மந்துவில் வேலுப்பிள்ளை அன்னம்மா தம்பதிகளின் புதல்வி உமாநிதியையும் (வலயக்கல்விப்பணிப்பாளர் -முல்லைத்தீவு ). தர்மராசாவுக்கு மீசாலை மார்க்கண்டு கௌரிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வி கோகுலவேணியையும் (ஆசிரியர் - யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்) வதனராசாவிற்கு திருகோணமலை அமிர்தலிங்கம் ஞானேஸ்வரி தம்பதிகளின் மகள் திலகவதியையும் இல்லறத்தில் இணைந்து வைத்து மனம் நிறைந்த மருமகள்களாக ஏற்றார்.

சௌத்திரி -(மருத்துவபீடம் - கொழும்பு)
சைத்தகி - மருத்துவபீடம் - யாழ்ப்பாணம்
துவேதன் - கணிய அளவியலாளர்
சாருதன் - சித்த மருத்துவ பீடம் - கைதடி
சாருஜா
அபிசாலா
சிவசுதன்

ஆகிய பேரப்பிள்ளைகளினையும் கண்டு மகிழ்வெய்தி மழலை மொழிபேசி பேரப்பிள்ளைகள் போற்றும் பேர்த்தியாக வாழ்ந்தார். சுற்றத்தில் உள்ள சிறார்கள் வாத்தியார் ஆச்சி என அன்புடன் அழைக்க அவர்களை அரவணைப்புடன் வளர்த்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் காலத்தில் தமது 90ம் வயதில் காலனின் குரல் கேட்டு 25.08.2019 அன்று இறையடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவில்...






அமரர்
வேலுப்பிள்ளை சின்னத்தம்பு

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 10.07.1927 | 29.02.2000 |

அமரர்
சின்னத்தம்பு சொர்ணலெட்சுமி

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 12.10.1929 | 25.08.2019 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப்பதிகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவதுநீறு புன்மைதவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

காண வினியது நீறு கவினைக் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத்தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே.

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் திருவால வாயான் திருநீறே.

இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் றிருநீறே.

மாலொ டயன்றியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் றிருநீறே.

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்து மால வாயான் றிருநீறே.

ஆற்ற லடல்விடை யேறு மால வாயான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மாணிக்கவாசக சுவாமிகளால்**

**தில்லையில் அருளிச் செய்யப்பட்ட**

# திருப்பொற் சுண்ணம்

(ஆனந்தமனோலயம்)

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ்சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவாகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்த்தபொற் சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. 6

சூடகந் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப
ஆர்ப்பபாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 14

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப்பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 15

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ(டு)
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க ளாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டு செண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போத்தல் பாடி
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 18

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம்பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டினத்தார் பாடல்கள்

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்தி கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி?

முந்தித் தவங்கிடந்து முன்னூறு நாள் சுமந்தே
அந்திபக லாய்சிவனை யாதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்?

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத் தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்?

நொந்து சுமந்து பெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய் தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்

அரிசியோ நானிடுவே னாத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உருகியுள்ள
தேனே! அமிர்தமே! செல்லத் திரவியப்பூ
மானே! எனவழைத்த வாய்க்கு?

அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் - மெள்ள
முகமேல் முகம் வைத்து முத்தாடி யென்றன்
மகனே! எனவழைத்த வாய்க்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னையிட்ட தீ முப்புரத்திலே
பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே
யானுமிட்ட தீ மூள்க! மூள்கவே!

வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்ப
லாகுதே பாவியேன் ஐயகோ! - காகம்
குருவி பறவாமல் கோதாட்டி யென்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை!

வெந்தாளோ சோணகிரி வித்தகா! நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ? சந்ததமும்
உன்னையே நோக்கி யுகந்து வரங்கிடந்து
என்னையே ஈன்றெடுத்த தாய்!

வீற்றிருந்தாள் அன்னை வீதிதனி லிருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறு ஆனாள் பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள்! ஏதென்றி ரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

மாதாவுடல் சலித்தாள் வல்வினையேன் கால்
சலித்தேன் வேதாவுங் கைசலித்து
விட்டானே நாதா இருப்பையூர் வாழ் சிவனே!
இன்னமோ ரன்னை கருப்பை யூர் வாராமற்கா

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே மேல் விழுந்தே
உற்றா ரழுமுன்னே, ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு.

நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
யல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளும், சுற்றமும், மைந்தரும், வாழ்வும், எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சியேகம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கும்பொழுது கொடு வந்ததில்லை பிறந்து மண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவதில்லை யிடை நடுவிற்
குறிக்குமிச் செல்வஞ்சிவன் தந்த தென்று கொடுக்கறியா
திறங்குங் குலாமருக் கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே!

ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல, பெண்டிஷுடீர் சதமல்ல, பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல, செல்வஞ் சதமல்ல, தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங் கச்சியேகம்பனே!

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டா
லிறவாதிருக்க மருந்துண்டு காணிது எப்படியோ
அறமார் புகழ் தில்லை யம்பல வாணரடிக்கமலம்
மறவாதிரு மனமே! யதுகாணன் மருந்துனக்கே!

தவியாதிரு நெஞ்சமே தில்லை மேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞானகரனைப் புரந்தகனை
அவியா விளக்கைப் பொன்னம் பலத்தடியே யைந்தெழுத்தாற்
செபியாமல் நீ செபித்தால் பிறவா முத்தி சித்திக்குமே

ஐயுந் தொடர்ந்து விழியுஞ் செருகி, யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர்! திருநீறு மிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுந்தோதவுங் கற்பியுமே!

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தருகே யினிச் சாம்பிணங்கள் கத்துங்
கணக்கென்ன? காண் கயிலாய புரிக காளத்தியே

வேதத்தினுட் பொருள் மண்ணாசை மங்கையை விட்டு விடப்
போதித்தவன் மொழி கேட்டிலையோ? செய்தபுண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன் போலே வெளிச்சமதாம் பொழுது
காதற்ற ஊசியும் வாராது காணுன் கடைவழிக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாப் பிழையுங், கருதாப் பிழையும், கசிந்துருகி
நில்லாப் பிழையும், நினையாப் பிழையும், நின்னஞ் செழுத்தைச்
சொல்லாப் பிழையும், துதியாப் பிழையும், தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே.

என் செயல் ஆவது யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன்செயலே என்று உணரப்பெற் றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே.

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ?
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ?
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ?
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ?
முன்னை எத்தனை எத்தனை சென்மமோ?
மூடன் ஆய்அடி யேனும் அறிந்திலேன்
இன்னும் எத்தனை எத்தனை சென்மமோ?
என்செய் வேன்கச்சி ஏகம்ப நாதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது உடல்:

குழநதை பிறக்கும் பொழுது அதன் உடலில் 300 எலும்புகள் இருக்கும்

ஆனால் வளர்ந்து பெரியவனானதும் மொத்தம் 206 எலும்புகளே இருக்கும்.

நமது உடல் எடையில் 14% எலும்புகளால் ஆனது.

நமது உடலில் உறுதியான எலும்பு தொடை எலும்பு. அது "கான்கீரிட்"டை விட வலிமை யானது.

நமது உடல் எடையில் 7% இரத்தமாகும். தினந்தோறும் 450 கலன் இரத்தம் சிறுநீரகத்தால் சுத்தப்படுத்தப்படுகிறது.

மனித உடலில் பெண்களுக்கு சராசரியாக 4.5லீட்டர் இரத்தம் ஆண்களுக்கு சராசரியாக 5.6 லீட்டர் இரத்தம் இருக்கும்.

நமது உடலில் உள்ள இரத்தச் சிவப்பணுக்களின் ஆயுட்காலம் 120 நாட்கள் அது போல் ஒவ்வொரு நொடியும் சுமார் இரண்டு மில்லியன் இரத்தச் சிவப்பணுக்கள் நமது உடலில் இறக்கின்றன.

நமது உடலில் உள்ள இரத்தக் குழாய்களின் நீளம் சுமார் 600000 மைல்கள்.

அதாவது இந்தத் தொலைவில் நாம் இரண்டு முறை உலகத்தைச் சுற்றி வந்து விடலாம்.

நமது கண்களின் எடை சராசரியாக 28 கிராம்.

நமது கண்களுக்கு 500 விதமான ஒளிகளைப் பிரித்தறியும் சக்தியுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது கண்களிலுள்ள கருவிழி மட்டுந்தான் இரத்தநாளம் இல்லாத உயிருள்ள திசு.

முதல் 8 வாரம்வரை குழந்தைகளின் கண்களில் கண்ணீர் வராது.

மனித இதயம் சராசரியாக ஒரு வருடத்திற்கு 35 மில்லியன் முறை துடிக்கிறது.

ஒரு சராசரி வாழ்வில் இதயமானது 205 பில்லியன் முறை துடித்து 1 மில்லியன் பெரல் இரத்தத்தை இரத்தக் குழாயில் செலுத்துகிறது.

இதயத்திலுள்ள இரத்த அழுத்தமானது இரத்தத்தை 30 அடி வரை பீச்சியடிக்கும் சக்திகொண்டது.

மனித மூளையில் சுமார் 100,000,000,000 (100 பில்லியன்) நரம்புச் செல்கள் உள்ளன.

ஒரு மனிதன் 35 வயதினை அடைந்தது முதல் மூளையில் தினமும் 7000 நரம்புச் செல்கள் இறக்கின்றன.

நாம் சுவாசிக்கும் மொத்த ஆக்ஸிஜனில் 20% மூளைக்குச் செல்கிறது.

நமது மூளை 80% நீரால் ஆனது.

நமது மூளையின் செயற்திறன் பகலை விட இரவில் அதிகமாக இருக்கும்.

நமது உடலில் வேகமாக வளரக்கூடிய திசு முடிதான்.

மனிதத் தலையில் சராசரியாக 100,000 தலை முடிகள் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உடலில் உள்ள கல்லீரலானது 500 விதமான வேலைகளைச் செய்கிறது.

பெண்கள் கருத்தரிக்கும் பொழுது கர்ப்பப்பையானது அதன் சாதாரண நிலையை விட 500 முறை விரிவடைகிறது.

## மனிதன் உயிரிழந்த பின்பு உறுப்புகள் செயல் இழக்கும் நேரம்

- ➔ கண்கள் : 31 நிமிடங்கள்
- ➔ மூளை : 10 நிமிடங்கள்
- ➔ கால்கள் : 04 மணிநேரம்
- ➔ தசைகள் : 5 நாட்கள்
- ➔ இதயம் : சில நிமிடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் தீர்க்கும் யோகாசனம்

யோகம் என்றால் அதிஷ்டம் என்பதாகும். மனிதனுடைய தேகத்தை நீண்ட காலத்துக்கு அழியாமல் பாதுகாக்கும் திறனுடையது யோகம் தரும் யோகாசனங்களாகும்.

யோகாசனங்களை அறிந்து பயிற்சி செய்வதால் மனித உடலின் அவயவங்கள் நேர்சீராக இயங்கி வரும் நிலையில் உடலிலுள்ள தசைகள், நரம்புமண்டலங்கள், சுவாசம், இரத்தச்சுற்றோட்டம் போன்றவை சிறப்பாகத் தொழிற்பட்டு வர ஆரம்பிக்கின்றன. இவற்றால் மனிதனுடைய உடல் நலம் மேம்படுகின்றது. இதே நேரம் மனநலன்களும் மாண்புறுகின்றன. இந்த நிலையில் மனிதனுடைய ஆயுள் விருத்தியடைந்து வரும் என்பது உண்மை.

யோகாசனங்களைப் பற்றி பலர் அறிந்திருந்தாலும் அவற்றால் கிடைக்கும் பயன்களை அறிந்திருப்போர் மிகச் சிலரே. யோகாசனம் செய்வதால் நோய்கள் குணமடைகின்றன. நோய்கள் அணுகாமல் இருக்கின்றன. இவ்யோகாசனங்களை நாளாந்தம் இரண்டு நிமிடம் தொடங்கி ஐந்து நிமிடங்கள் வரை செய்து வரலாம். படிப்படியாக காலப்போக்கில் இவற்றால் நன்மை கிடைப்பதை அறியமுடியும். யோகாசனத்தை நாள்தோறும் செய்துவந்தால் மருந்து மாத்திரைகளைத் தேடி மருத்துவமனைகளுக்கு அலையவேண்டிய தேவை படிப்படியாக நீங்கிவருவதை உணரமுடியும். இதே நேரம் மனித நேயத்துடன் வாழ்வியலையும் வளர்த்துக்கொள்ள முடியும். யோகமும் கடவுள் தியானமும் மனித வாழ்வியலை பிரகாசிக்கச் செய்யும் நோய் நொடி இல்லாமல் வாழும் தன்மை உருவாகும்.

இருளைச் சபித்துக் கொண்டிருப்பதை விட ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பது எவ்வளவோ மேலானது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோகாசனம் செய்வதற்கு முன் கவனிக்க வேண்டியவை

1. இறுக்கமான உள்ளாடையும் தளர்வான வெளி ஆடையும் அணிந்திருத்தல்.
2. யோகாசனம் செய்யும் நேரம் காலை 5 முதல் 7 மணியும் மாலை 5 முதல் 7 மணியும் ஆகும்.
   உணவு உண்ட 5 மணிநேரம் கழித்து யோகாசனம் செய்யலாம்.
3. வெறும் தரையில் ஆசனம் செய்யக்கூடாது. ஏதாவது ஒரு விரிப்பின் மேல் செய்தல் வேண்டும். ஆசனம் செய்யும் இடம் நல்ல காற்றோட்டமுள்ள இடமாக இருத்தல் வேண்டும்.
   சூரிய ஒளி உடம்பின்மேல் நேராகப் படக்கூடாது ஆகையால் அதிகாலையில் செய்தல் நன்று கிழக்குத் திசை நோக்கி ஆதனம் செய்வது சிறப்பான பலனைத் தரும்.
4. யோகாசனப் பயிற்சி முடிந்த உடனே அந்த இடத்திலேயே 15 நிமிடம் வரை சரீரத்தைக் கிடத்தி இளைப்பாற வேண்டும்.

## யோகாசனம் செய்யக்கூடாத சந்தர்ப்பங்களாவன

1. எண்ணெய் ஸ்ஞானம் செய்த நாட்களிலும் அதிக களைப்பு, வெகு தூர பிரயாணம் மற்றும் உடம்பு சரியில்லாத, காலங்களிலும் அதிகமாக உடலை வருத்திக் கொள்ளக் கூடாது.
2. அறுவை சிகிச்சை செய்து கொண்ட 6 மாத காலத்துக்குள் யோகாசனம் செய்யக்கூடாது.
3. உணவு உண்டவுடன் ஆசனம் செய்யக்கூடாது.
4. ஜன நெருக்கடியும் கூச்சலும் குழப்பமும் சூழ்ந்த இடங்களில் இருந்துகொண்டு யோகாசனப் பயிற்சி செய்யக்கூடாது.
5. யோகாசனத்தை ஒரு குருவின் உதவியின்றி செய்யக்கூடாது ஏனெனில் ஒவ்வொருவரும் செய்யும் ஆசனங்கள் சரியா, தவறா என்பதைக் கண்காணித்து திருத்தும் பக்குவம் யோக நிபுணருக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. குறைந்தது ஒரு பத்து நாட்களுக்காவது ஒரு குருவின் நேரா பார்வையில் ஆசனங்களைப் பழகவேண்டும். இவ் யோகப் பயிற்சி மூலம் மனத்தை அடக்கவும் உள்ளுறுப்புக்களுக்கு வேலை கொடுக்கவும் உதவுகின்றது. உடல் வலிமை மன வலிமை இவை இரண்டையும் அட்சய பாத்திரமாய் அள்ளித்தந்து 72 ஆயிரம் நாடி நரம்புகளை தூண்டி புத்துணர்ச்சி அளித்து கண்களில் ஒளி வீசச் செய்யும் ஆற்றல் இவ்யோகாசனத்துக்கே உண்டு.

## யோகாசனத்தின் நன்மைகள்

1. ஆரோக்கியம், ஆயுள், ஞாபகசக்தியை அதிகரிக்கச் செய்கின்றது.
2. நாள் முழுவதும் புத்துணர்ச்சியோடு செயல்பட உதவுகிறது.
3. மூளைக்கு பலத்தை தந்து மனச்சோர்வு ஏற்படாமல் பாதுகாக்கின்றது.
4. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது.
5. உடலில் உள்ள நரம்புகளை வீரியப்படுத்துகின்றது.
6. மனதை நல்வழிப்படுத்துகின்றது.
7. இதயம், நுரையீரல் போன்ற சுவாச உறுப்புக்கள் சீராக இயங்க துணைசெய்கின்றது.
8. மலச்சிக்கலை நீக்குகின்றது.
9. பசியின்மை, தூக்கமின்மையைப் போக்குகின்றது.
10. முகத்தில் தெளிவும் அழகும் உண்டாகின்றது.
11. எண்ணற்ற வியாதிகளிலிருந்து விடுதலை பெறச் செய்கின்றது.

நாங்கள் பிறந்த அன்றே எங்களுக்கு இறப்பு நிச்சயம் என்று கண்டோம். இறக்கும் வரை அடுத்தவரின் உதவியின்றி எமது கருமங்களை நாம் செய்து வாழவேண்டும். அடுத்தவருக்குப் பாரமாக நாம் இராமல் வாழ இவ் யோகாசனம் வழி செய்கின்றது. இவ் யோகாசனப் பயிற்சியானது மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றின் ஒவ்வொரு வல்லமைக்கும் செழுமைக்கும் செயற்பாட்டிற்கும் நிச்சயமாகப் பயனளிக்கக்கூடியதாகும். எனவே நாம் எல்லோரும் முயற்சியுடன் கூடிய பயிற்சியின் மூலம் சிறந்த பலனை அடைந்து நோயற்ற வாழ்வு வாழ்வோமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடைப்பயிற்சி மூலம் நலன் பல பெறலாம்.

1. நோய் வரமுன்பே உடல் நலனைப் பாதுகாக்கும்.
2. வந்துவிட்ட நூற்றுக்கணக்கான நோய்களைப் போக்க மருத்துவர்களால் சிபார்சு செய்யப்படுவது நடைப்பயிற்சி
3. நடக்க நடக்க இதயத்தின் தசைகள் வலுவடைகின்றன. உடல் உறுப்புக்களுக்குக் கிடைக்கும் இரத்தத்தின் அளவு அதிகரிக்கின்றது.
4. உடல் செல்களுக்கு அதிகளவு ஒட்சிசன் கிடைக்க உடல் கழிவுகள் முழுமையாக வெளியேற்றப்படுகின்றன.
5. இரத்தம் சுத்தமடைய அநாவசிய கொழுப்பு தவிர்க்கப்படுகின்றது. இதன் மூலம் மாரடைப்பு தடுக்கப்படுகின்றது.
6. நடக்க நடக்க உடல் தசைகள் இறுக்கமடைகின்றன. தசை நார்கள் வலிமை பெறுகின்றன. இவற்றிற்கெல்லாம் இரத்தத்தில் அதிகளவாக உள்ள சர்க்கரை உபயோகப்படுத்தப்படுவதால் நீரிழிவு நோய் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.
7. மெலிந்த உடல், தெளிந்த முகம், நிறைவான மனம், உடல் பலம், ஆன்மபலம் இவை அனைத்தையும் தருவது நடைப்பயிற்சி
8. தினமும் 3 கிலோமீற்றர் தூரம் நடப்பதன் மூலம் தேவையின்றி உடலில் சேர்ந்துள்ள கொழுப்பு கரைந்து உடல் இளைப்பதுடன் இளமையும் புத்துணர்ச்சியும் பெறமுடியும்.
9. நடைப்பயிற்சியினால் முழங்கால் மூட்டில் இருக்கும் திசுப்பொருளும் மூட்டைச் சுற்றியிருக்கும் தசைப்பொருளும் வலுவடைவதால் மூட்டுவலி வராது எலும்பின்அடர்த்தி நடைப்பயிற்சியினால் அதிகமாவதால் எலும்புச் சிதைவு நோய் ஏற்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சி ஏன் அவசியமாகின்றது.

1. உடற்பயிற்சி செய்து வந்தால் களைப்பின்றி உற்சாகத்துடன் இயங்கமுடியும்.
2. மனப்பளுவைக் குறைத்து மன அமைதியைக் கொண்டு வரும்.
3. எலும்புகள் நலிந்து, செல்லக்கூடிய வாய்ப்பை உடற்பயிற்சி குறைத்துவிடும். முக்கியமாக எலும்புச் சிதைவு நோய்கள் (Osteoporosis) வருவதற்கான வாய்ப்பைக் குறைக்கும்.
4. களைப்புள்ள உடலையும் உள்ளத்தையும் மீண்டும் உற்சாகத்துடன் இயங்க வைக்க உதவும்.
5. வயதானவர்கள் மற்றவர்களில் தங்கியிராது தம்மைத் தாமே பேணுவதற்கும் உடற்பயிற்சி கைகொடுக்கும்.
6. செய்யும் தொழிலானது உடல் உழைப்புடன் கூடியது இல்லையெனில் சைக்கிள், ஓடுதல், விரைவுநடை, நடனமாடுதல், நீந்துதல் போன்ற நடுத்தர அளவிலான உடற்பயிற்சிகளைச் செய்யலாம்.

## நில அளவீடுகள்

| | |
|---|---|
| 1 ஹெக்ரேயர் | - 2.471054 ஏக்கர் - 10,000 சதுரமீற்றர் |
| 1 ஏக்கர் | - 15.738 பரப்பு (மேட்டுக்காணி) |
| | - 23.607 பரப்பு (வயல்காணி) |
| 1 பரப்பு | - 18 குளி (மேட்டுகாணி) 12 குளி (வயல்காணி) |
| 1 பரப்பு | - 10.166 பேர்ச்சஸ் |
| 1 ஏக்கர் | - 4 றூட் - 160 பேர்ச்சஸ் |
| 1 பேர்ச்சஸ் | - 25.29285 சதுரமீற்றர் |
| 1 குளி | - 153.77 சதுர அடி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீரின் முக்கியத்துவம்

1. உடலிலுள்ள ஜீவசத்துக்களைக் கரைத்து திரவ ரூபமாக உடலில் உள்ள செல்களுக்கு எடுத்துச் செல்கின்றது.
2. உடலிலுள்ள இரசாயனப் பொருட்களுடன் சேர்ந்து கரைந்து உடல் முழுவதும் பரவுவதற்கு அவசியமாகின்றது.
3. உடலிற்கு வெப்பம் மற்றும் குளிர்ச்சியில் சமநிலையை உண்டாக்குவதில் தண்ணீர் முக்கிய பங்கு வகிக்கின்றது.
4. நுரையீரல் வழியாகவும் சருமங்கள் வழியாகவும் அழுக்குகளை வியர்வை மூலமாகவும் சளி மூலமாகவும் வெளியேற்றுகின்றது.
5. நமது உடம்பிலுள்ள திசுக்கள் விசமாகாமல் தடுத்து ஒட்சிசனை உடல் முழுவதும் உள்ள திசுக்களுக்குக் கொடுத்து உதவுகின்றது.
6. முக்கியமாக நாம் சாப்பிட்ட உணவுகள் நல்லபடியாக செரிமாணம் அடைவதற்கு தண்ணீர் அவசியம்.
7. மனித இனத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பது சூரிய ஒளி பட்ட தண்ணீர் தான்.
8. சூரிய ஒளி பட்ட நீரைக் குடிக்கும்போது அதன் ஒவ்வொரு சொட்டிலும் சூரிய சக்தி பரவி 30 வீதம் கூடுதலான ஒட்சிசனும் நைதரசனும் கிடைக்கின்றன.
9. சூரிய ஒளிக்கதிரானது கெடுதலான பக்ரீரியாக் கிருமிகளை அளித்து நீரைச் சுத்தப்படுகின்றது.
10. உடலின் உறுப்புக்கள் சுத்தப்படுத்தப்படுகின்றது.
11. இயற்கையானது மனித சமுதாயம் நோயின்றி வாழ்வதற்காகவே, தண்ணீரையும் சூரிய வெளிச்சத்தையும் காற்றையும் படைத்திருக்கிறது.
12. மனிதன் வாழ்வதற்கு தினமும் தண்ணீர் குடித்துத்தான் ஆகவேண்டும். தண்ணீர் இல்லாமல் பிரபஞ்சத்தில் உயிரினம் வாழமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவாணி துதி

வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளை யின்பம் குலவுகவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்திலுள் நின்றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள்.

மாதர் தீங்குறற் பாட்டிலிருப்பாள்
மக்கள் பேசும் மழலையிலுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலை
கிளியின் நாவை இருப்பிடங்கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகி
குலவ சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலுடையுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள்

அம்மா தாயே கலைவாணி – நீ என்
நாவைக் காப்பாயே
இம்மா நிலத்தின் உதவியெல்லாம்
இருக்குதுன் நாவின் அசைவினிலே
சும்மா இருக்கத் தெரியாது
சுகத்தைச் சொன்னால் விளங்காது
தம்மாலென்றே தடுமாறும் இந்தத்
தரணியை ஆண்டிட வேண்டுமடி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மக்களின் அன்றாடக் கிரியைகளில் சில நடைமுறைகள்

➢ **மாவிலைக் தோரணம்:-**

1) சுபகாரியங்களின் போது, மாவிலையின் காம்பு நுனியை முன்புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பைக் குத்திக் தொங்க விட வேண்டும். இது மாவிலை தலை குனிந்து வரவேற்கும் பாணியில் இருக்கவேண்டும். 5 அல்லது 7 இலைகளைக் குத்தலாம்.

2) அபரக் கிரியையின் போது (மரணச் சடங்கின் போது), மாவிலையின் காம்பு நுனியை பின்பக்கமாக மடித்துக் குத்தித் தொங்க விடுதல் முறை யாகும்.

➢ **தென்னந் தோரணம்:-**

1) சுபகாரியங்களின் போது, தென்னங் குருத்துத் தோரணத்தின் நுனி கீழ்ப் பக்கமாக இருக்கும்படியாக அமைய வேண்டும்.
2) அபரக் கிரியையின்போது, தென்னங் குருத்துத் தோரணத்தின் நுனி மேற் பக்கமாக இருக்கும் படியாக அமைய வேண்டும்.

➢ **வாழை மரம் கட்டுதல்:-**

சுபகாரியங்களின் போது வாழைமரம் கட்டுவதன் நோக்கம் வாழை மனிதனுக்குப் பெரும் பயனைத் தருவது போல் எல்லோரிடமும் இப்படி யான பயனைப் பெறக்கூடிய நிலை வரவேண்டும் என்றும், மற்றும் இதனை அழிக்க முடியாது. வாழையடி வாழையாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வாழை மரம கட்டப்படுகிறது.

வாழைக் குலை பழுத்த பழமாக மஞ்சள் நிறக் கனியாக அமைந்தால் மிகவும் சிறப்பானது.

மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக் காயை மரத்துடன் கட்டுவது மரபு. இது துக்கத்தைக் குறிக்கும்.

➢ **வாழையிலை பயன்படுத்தும் முறை:-**

கும்பம் வைக்கும் போது தலை நுனிப்பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை அல்லது வடக்குத் திசையாக அமைத்துக் கும்பம் வைக்க வேண்டும்.

அது மட்டுமல்ல, சாப்பிடும் போது வாழையிலையின் தலைநுனி இடக்கைப் பக்கமாக இருத்தல் வேண்டும்.

எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழையிலையின் தலைநுனி தெற்குப் பக்கமாகப் போடுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் சாஸ்திரம்

## எழுத்துக்களும் அவற்றுக்கான எண்களும்

| எழுத்துக்கள் | எண் |
|---|---|
| A, I, J, Q , Y | 1 |
| B, K, R | 2 |
| C, G, L, S | 3 |
| D, M, T | 4 |
| E, H, N, X | 5 |
| U, V, W | 6 |
| Q, Z | 7 |
| F, P | 8 |

ராசிக் கட்டம்

| | | | |
|---|---|---|---|
| மீனம் 12 | மேஷம் 1 | ரிஷபம் 2 | மிதுனம் 3 |
| கும்பம் 11 | | | கடகம் 4 |
| மகரம் 10 | | | சிம்மம் 5 |
| தனுசு 9 | விருட்சிகம் 8 | துலாம் 7 | கன்னி 6 |

மேஷம், மிதுனம், சிம்மம், துலாம். தனுசு, கும்பம் — இவை ஆண்ராசிகள் / ஒற்றை ராசிகள்

ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் — இவை பெண்ராசிகள் / இரட்டை ராசிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டின் திசைகளும் அமைப்பும்

★ **கிழக்குத் திசை, வடகிழக்குப் பகுதி:-**

கிணறு, பூசை அறை, வரவேற்பறை, தண்ணீர்த் தொட்டி

★ **கிழக்குத் திசை, தென்கிழக்குப் பகுதி:-**

உணவருந்தும் அறை, சமையலறை, குளியலறை, கழிவறை

★ **தெற்குத் திசை, தென்கிழக்குப் பகுதி:-**

வரவேற்பு அறை, படுக்கையறை, மாடிப்படிகள்

★ **தெற்குத் திசை, தென்மேற்குப் பகுதி:-**

படுக்கை அறை, அலுவலகம்

★ **மேற்குத் திசை, தென்மேற்குப் பகுதி:-**

தண்ணீர்த்தொட்டி, பொருட்கள் வைக்கும் அறை, குளியலறை

★ **மேற்குத் திசை, வடமேற்குப் பகுதி:-**

படுக்கை அறை, மாட்டுத் தொழுவம், தண்ணீர்த் தொட்டி

★ **வடக்குத் திசை, வடமேற்குப் பகுதி:-**

வரவேற்பு அறை, படிக்கும் அறை, குளியலறை

★ **வடக்குத் திசை, வடகிழக்குப் பகுதி:-**

பூஜை அறை, கிணறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கு நீள, அகல அடி அளவின் பலன் அறிதல்

| | | |
|---|---|---|
| 06 | அடி | நன்மை |
| 07 | அடி | தரித்திரம் |
| 08 | அடி | மிகுந்த பாக்கியம் |
| 09 | அடி | மிக்க பீடை |
| 10 | அடி | ஆடு மாடு குறைவில்லா வாழ்வு |
| 11 | அடி | பால் சாதமுண்டு |
| 12 | அடி | செல்வம் விலைபோகும் |
| 13 | அடி | எல்லோரும் பகைவராவர் |
| 14 | அடி | சஞ்சலம், நஷ்டம், மனக்கஸ்ரம் |
| 15 | அடி | காரிய விக்கினம் பாக்கியம் சேராது |
| 16 | அடி | மிகுந்த செல்வமுண்டு |
| 17 | அடி | அரசனைப் போல் பாக்கியம் சேரும் |
| 18 | அடி | அமர்ந்த மனை பாளாகும் |
| 19 | அடி | மனைவி மக்கள் மரணம் |
| 20 | அடி | இன்பம் தரும் இராசபோகம் |
| 21 | அடி | பசுக்களுடன் பால் பாக்கியம் |
| 22 | அடி | மகிழ்ச்சி எதிரி அஞ்சுவான் |
| 23 | அடி | நோயுடன் கலங்கி நிற்பான் |
| 24 | அடி | வயது குன்றும் மத்திமம் |
| 25 | அடி | தெய்வ கடாச்சம் இல்லை |
| 26 | அடி | இந்திரனைப் போல் வாழ்வர் |
| 27 | அடி | மிக்க செல்வத்துடன் வாழ்வர் |
| 28 | அடி | செல்வமும் தெய்வ கடாச்சமும் உண்டு |
| 29 | அடி | பால் பாக்கிய செல்வமுண்டு |
| 30 | அடி | லக்சுமி கடாச்சம் பெற்று வாழ்வார் |
| 31 | அடி | சிவகடாச்சத்துடன் நன்மை பெருகும் |
| 32 | அடி | முகுந்தன் அருள் பெற்று வையகம் வாழ்வார். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 33 | அடி | நன்மை உண்டு |
| 34 | அடி | குடி விட்டோம் |
| 35 | அடி | லட்சுமி கடாச்சம் உண்டு |
| 36 | அடி | அரசோடு அரசாள்வர் |
| 37 | அடி | இன்பமும் இலாபமும் உண்டு |
| 38 | அடி | பிசாசு குடியிருக்கும் |
| 39 | அடி | இன்பமும் சுகமும் உண்டாகும் |
| 40 | அடி | என்றும் சலிப்பு உண்டாகும் |
| 41 | அடி | இன்பமும் செல்வமும் உண்டு |
| 42 | அடி | லட்சுமி குடியிருப்பாள் |
| 43 | அடி | சிறப்பில்லை தீங்கு உண்டாகும் |
| 44 | அடி | கண் போகும் |
| 45 | அடி | சற்புத்திரர் உண்டு |
| 46 | அடி | வீடு விட்டு ஓட்டும் |
| 47. | அடி | எந்நாளும் வறுமை உண்டு |
| 48 | அடி | தீப்படும் |
| 49 | அடி | மூதேவி வாசம் |
| 50 | அடி | பால் பாக்கியம் |
| 51 | அடி | விஜாயியம் |
| 52 | அடி | தானியமுண்டு |
| 53 | அடி | வீண் செலவு |
| 54 | அடி | இலாபம் |
| 55 | அடி | பந்துயன் விரோதம் |
| 56 | அடி | புத்திர உற்பத்தி |
| 57 | அடி | புத்திர இலாபம் |
| 58 | அடி | விரோதம் உண்டு |
| 59 | அடி | விசனம் |
| 60 | அடி | பொருள் விருத்தி |
| 61 | அடி | பகையுண்டு |
| 62 | அடி | வறுமையுண்டாகும் |
| 63 | அடி | இருப்பும் குலையும் |
| 64 | அடி | வெகு சம்பத்துண்டு |
| 65 | அடி | ஸ்திரநாசம் |
| 66 | அடி | புத்திர பாக்கியம் |
| 67 | அடி | பயமுண்டு |
| 68 | அடி | திரவிய லாபம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 69 | அடி | அக்கினி உபாதை |
| 70 | அடி | அன்னியருக்கு பலன் |
| 71 | அடி | இராஜ்யப்பிரியம் |
| 72 | அடி | வெகு பாக்கியம் |
| 73 | அடி | குதிரை கட்டி வாழ்வான் |
| 74 | அடி | பரபல விருத்தி |
| 75 | அடி | சுகமுண்டு |
| 76 | அடி | புத்திர அற்பம் |
| 77 | அடி | ஆனை கட்டி வாழ்வான் |
| 78 | அடி | புத்திர அற்பம் |
| 79 | அடி | கன்று காலி விருத்தி |
| 80 | அடி | லஷ்மி வாசம் |
| 81 | அடி | இடி விழும் |
| 82 | அடி | தாத்தா தோஷமுண்டு |
| 83 | அடி | மரண பயம் |
| 84 | அடி | செளபாக்கியம் |
| 85 | அடி | சீமானாவான் |
| 86 | அடி | இம்சையுண்டு |
| 87 | அடி | தண்டிகையுண்டு |
| 88 | அடி | செளபாக்கியம் |
| 89 | அடி | பல வீடுகட்டுவான் |
| 90 | அடி | யோக பாக்கியமுண்டு |
| 91 | அடி | வித்துவாம்சம் உண்டு |
| 92 | அடி | ஐஸ்வரியம் |
| 93 | அடி | தேசாந்திரம் வாழ்வான் |
| 94 | அடி | அன்னிய தேசம் போவான் |
| 95 | அடி | தனவானாவான் |
| 96 | அடி | பிரதேசங்கள் செல்வான் |
| 97 | அடி | கப்பல் வியாபாரம் போவான் |
| 98 | அடி | பிரதேசங்கள் போவான் |
| 99 | அடி | இராஜ்யம் ஆள்வான் |
| 100 | அடி | சேமத்துடன் வாழ்வான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கியமான இரண்டு

| | | |
|---|---|---|
| நம்முடன் வருவது இரண்டு | - | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது இரண்டு | - | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | - | பசி, தாகம் |
| நம்மால் பிரிக்க முடியாதது இரண்டு | - | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது இரண்டு | - | பொறாமை, கோபம் |
| வருவதும் போவதும் இரண்டு | - | இன்பம், துன்பம் |
| வந்தால் போகாததுஇரண்டு | - | புகழ், பழி |
| போனால் வராதது இரண்டு | - | இளமை, மூப்பு |
| எல்லோருக்கும் பொதுவான இரண்டு | - | பிறப்பு, இறப்பு |

## மனித தர்மம்

| | | |
|---|---|---|
| ஏழ்மையிலும் | - | நேர்மை |
| கோபத்திலும் | - | பொறுமை |
| தோல்வியிலும் | - | விடாமுயற்சி |
| தரித்திரத்திலும் | - | பரோபகாரம் |
| துன்பத்திலும் | - | தைரியம் |
| செல்வத்திலும் | - | எளிமை |
| பதவியிலும் | - | பண்பு |

## பதினாறு பேறுகள்

| | | | |
|---|---|---|---|
| 01. | புகழ் | 02. | நுகர்ச்சி |
| 03. | கல்வி | 04. | அறிவு |
| 05. | வலி | 06. | அழகு |
| 07. | வெற்றி | 08. | பெருமை |
| 09. | நன்மக்கள் | 10. | இளமை |
| 11. | நெல் | 12. | துணிவு |
| 13. | நல்லாள் | 14. | நோயின்மை |
| 15. | பொன் | 16. | வாழ்நாள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

01. வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நிருவாக மாவட்டங்களின் எண்ணிக்கை - ஐந்து (05)
02. இலங்கையில் பழங்குடியினர் அதிகமாக மகாவலியின் எப்பகுதியில் வசிக்கின்றனர் - C வலயத்தில்
03. இலங்கையின் முதலாவது விவசாய குடியேற்றத்திட்டம் - கல்லோயா
04. இலங்கையிலிருந்து எந்நாட்டிற்கு வெற்றிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது - இந்தியா
05. உலகின் சீனிப்பாத்திரம் என அழைக்கப்படும் நாடு- கியூபா
06. எழுதப்படாத அரசியல் அமைப்பு இருப்பது - பிரித்தானியா
07. சார்க் நாடுகளுக்கான பல்கலைக்கழகம் காணப்படுவது - கத்மண்டு (நேபாளம்)
08. மனித உடலில் உள்ள மிகப் பெரிய உறுப்பு - ஈரல்
09. உலகில் எத்தனை மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன - 9000
10. அஸ்வான் அணை உள்ள நதி - நைல்நதி
11. இலங்கையில் ஆகக்கூடிய பிரதேச செயலகங்களைக் கொண்ட நிர்வாக மாவட்டம் - குருநாகல்
12. பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திர முனைக்கும் , கொழும்பிலிருந்து சங்கமன்கந்தவிற்கும் உள்ள தூரம் - 432 km 224km
13. ஆதிகாலத்தில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட வாசனைத்திரவியம் - கறுவா
14. ஜப்பானிய பாராளுமன்றத்திற்கு வழங்கும் பெயர் - டயெற்
15. சீன செய்திச் சேவையின் பெயர் - சின்ஹூவா
16. உலகின் அகதிகளைப் பாதுகாக்கும் ஐ.நா ஸ்தாபனம் UNHCR
17. இலங்கை மிகப்பழைய காலத்தில் என்ன பெயர் கொண்டு அறியப்பட்டது - தம்பபன்னி
18. இலங்கையின் நிர்வாக மாவட்டங்களின் எண்ணிக்கை - 25



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. இலங்கையில் முதல் முறையாக முறை சார்ந்த சனத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்ட வருடம் - 1871

20. இலங்கையின் இறுதி ஆளுனராகவும் முதலாவது ஆளுனராகவும் இருந்தவர் - சேர் ஹென்றி மொங்க் மெசன் மூர்

21. சர்வதேச மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படும் நாள் டிசெம்பர் 10

22. அதிகளவான சந்திரன்கள் காணப்படும் கிரகம் - வியாழன்

23. திறிலியன் என்பது - ஆயிரம் (1000) பில்லியன்கள்

24. கண்டி உடன்படிக்கை கைச்சாத்திட்ட காலத்தில் நாட்டை நிர்வகித்த ஆளுனர் - சேர்.றொபேட் பிறௌண்றிக்

25. இலங்கையின் ஆண்டு மழை நாட்களின் எண்ணிக்கைக்கு அண்ணளவானது - 103

26. இலங்கை ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் உறுப்புரிமை பெற்ற ஆண்டு - 1955

27. இலங்கையின் தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்

28. இலங்கையின் தேசிய மிருகம் - மரஅணில்

29.சாதாரண ஒரு மனிதனின் குருதியில் அடங்கும் செங்குருதி, வெண்குருதி விகிதம் - 600:1

30. உலகில் அதிகளவு கோப்பி உற்பத்தி செய்யும் நாடு - பிறேசில்

31. இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் தேசியப்பட்டியல் உறுப்பினர் - 196- 29

32. ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் எப்போது ஸ்தாபிக்கப்பட்டது - 1996

33. தொலைக்காட்சி ஒளிபரப்புக்காக செய்மதியை முதன்முதலில் பயன்படுத்திய நாடு - கனடா

34. திருக்குறளில் மொத்தம் எத்தனை குறள்கள் உள்ளது - 1330

35. பித்தத்தைச் சுரக்கும் உறுப்பு - ஈரல்

36. மகா பொல நம்பிக்கை நிதியம் எந்த ஆண்டிலிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது - 1986

37.இலங்கையில் இலவசக்கல்வித்திட்டம் எப்போது அறிமுகப் படுத்தப்பட்டது - 1972



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38. உலகில் அதிகளவில் பயிரிடப்படும் தானிய வகை - கோதுமை

39. அமெரிக்காவின் இராணுவ தலைமையகம் - பெண்டகன்

40. இலங்கையின் நிலப்பரப்பளவு - 62 705 $km^2$

41. இலங்கையின் தேசியமரம் - நாகமரம்

42. அமெரிக்க உளவு சேவைக்கு வழங்கும் பெயர் - CIA

43. உலகின் அதிக நாடுகளைக் கொண்ட கண்டம் - ஆபிரிக்கா

44. நள்ளிரவில் சூரியன் தெரியும் நாடு - நோர்வே

45. இலங்கை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1942

46. உலகின் ஒரே இந்து சமய இராட்சியமாக கருதப்பட்டது - நேபாளம்

47. மனித உடலில் மிகப்பெரிய சுரப்பி - ஈரல்

48. இலங்கையின் மிகப்பெரிய களப்பு கடனீரேரி - புத்தளம்

49. இலங்கை சுதந்திரமடைந்த ஆண்டு - 1948

50. ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் - சுவிற்சர்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில அளவைகளை அறிவோம்.

ஹெக்டேர் - 2 ஏக்கர் 47 சென்ட்

1 ஹெக்டேர் - 10,000 சதுர மீட்டர்

1 ஏக்கர் - 0.405 ஹெக்டேர்

1 ஏக்கர் - 4046.82 சதுர மீட்டர்

1 ஏக்கர் - 43 560 சதுர அடிகள்

1 ஏக்கர் - 100 சென்ட்

1 சென்ட் - 435.6 சதுர அடிகள்

1 சென்ட் - 40.5. சதுர மீட்டர்

1 கிரவுண்ட் - 222.96 சதுர மீட்டர்

1 கிரவுண்ட் - 2400 சதுர அடிகள்

1 மீட்டர் - 3.281 அடி

1 குழி - 44 சென்ட்

1 மா - 100 குழி

1 காணி - 132 சென்ட் (3குழி)

1 காணி - 1.32 ஏக்கர்

1 காணி - 57 499 சதுர அடி

1 டிசிமல் - 1 1/2 சென்ட்

1 அடி - 12 இன்ச் (30.38 செ.மீ)

1 மைல் - 1.61 கிலோ மீட்டர் (1610 மீட்டர்)

1 மைல் - 5280 அடி (8 பர்லாங்கு)

1 கிலோ மீட்டர் - 1000 மீட்டர் (0.62 மைல்)

1 கிலோ மீட்டர் - 3280 அடி

1.61 கிலோ மீட்டர் - 1 மைல்

1 பர்லாங்கு - 660 அடி (220 கெஜம்)

1 செயின் - 66 அடி (100 லிங்க்)

1 லிங்க் - 0.66 அடி

1 கெஜம் - 3 அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 பர்லாங்கு - 1 மைல் ( 201.16 மீட்டர்)

1 ஏர்ஸ் - 1076 சதுர அடி ( 2.47 சென்ட் )

22 கெஜம் - 1 செயின் (66 அடி)

10 செயின் - 1பர்லாங்கு

1 இன்ச் - 2.54 செ.மீ

1 பேர்ச் - 272 சதுர அடி

1 ஏக்கர் - 160 பேர்ச்

1 செ.மீ - 100 மி.மீ

1 கெஜம் - 0.9144 மீட்டர்

1 மீட்டர் - 1.093613 கெஜம் (3.28 அடி)

1 சதுர மீட்டர் - 10.76391 சதுர அடிகள்

1 சதுர அடி - 0.00929 சதுர மீட்டர்

30 சதுர மைல் - 1 டவுன்சிப்

640 ஏக்கர் - 1 சதுர மைல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
1929
10
12



உதிர்வு
2019
08
25

அமரர்

## சின்னத்தம்பு சொர்ணலெட்சுமி

**கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து-நீங்கள்
விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்**

**ஓம் சாந்தி சாந்தி!!!**

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிராத்திக்கின்றோம்.

கிராம அபிவிருத்தி சங்கம் (R.D.S)
**தம்பகாமம் – பளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் பூக்கள்

மலர்வு
12
*
10
*
1929



உதிர்வு
25
*
08
*
2019

பச்சிலைப்பள்ளி கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின்
தலைவர் திரு.சி.வதனராசா அவர்களின் அன்புத்தாயார்

அமரர்

## சின்னத்தம்பு சொர்ணலட்சுமி

பூவிதழ் பூத்தாலே புன்னகையாய் சிரிப்பீர்களே
நீங்கள் எல்லோர் மனதிலும்
இடம் பிடித்து விட்டு ஏன் திடீர் என்று
திகைக்க வைத்து விட்டீர்கள்
சிப்பிக்குள் முத்தாக வந்த எங்கள் உறவே
எம் எல்லோரையும்
மறந்து சென்றீர்களோ....

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்கு
பிரார்த்திக்கின்றோம்.

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**

-பணிப்பாளர்கள், பணியாளர்கள்-
பச்சிலைப்பள்ளி கால்நடைவளர்ப்போர்
கூட்டுறவுச் சங்கம் தலைமை பணிமனை
கரந்தாய், பளை

சாயிஸ்தான் கண்டி வீதி மிருசுவில் 0778776744



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்!

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 |  | 25 |
| ❖ | | ❖ |
| 10 | | 08 |
| ❖ | | ❖ |
| 1929 | | 2019 |

கிளி/பளைமத்திய கல்லூரி ஊழியர் நலன்புரிச் சங்கத்தலைவர்
திரு.சி.வதனராசா அவர்களின் தாயார்

## அமரர் திருமதி சின்னத்தம்பு சொர்ணலட்சுமி
(தம்பகாமம் பளை)

பாரைவிட்டுப் பறந்தோடிபோன இடம் சொல்லம்மா
சாந்தமுக அழகும் காந்தகண்கவர் கனிவானபேச்சும்
கண்ணீரில் நாம் மிதக்க காற்றாக பறந்ததுவோ!
இடியென்று வந்ததுயர் விதி என்று சொல்லிடவோ!
பெற்றமக்கள் அனைவரையும் பாசமுடன் அரவணைத்து
பாரினில் உயர்ந்து நிற்க பாதையை காட்டிவைத்திர்!
ஒளிதந்தசுடர் விளக்கை புயல் கொண்டு போனதோ
சொல்லாமல் சென்றதெங்கே பாவிகளாய் உம் பிள்ளைகள்
நொந்து இங்கே வாடிநிற்க நொடிப்பொழுதில் ஏன் மறைந்திர!
நின்பிள்ளைகள் துயர்தலை விழிதிறந்து பார்த்திடம்மா!
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்க்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு
அவரது ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
கிளி/ பளை மத்திய கல்லூரி
பளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மலர்வு 12 ★ 10 ★ 1929



உதிர்வு 25 ★ 08 ★ 2019

எமது ஓய்வு பெற்ற சக கிராம அலுவலரான
சின்னத்தம்பு புவனராசா அவர்களின் அன்புத் தாயார்

## அமரர்– சின்னத்தம்பு சொர்ணலட்சுமி

இதயத்தின் தூறலில் உயிர்ப்பிழந்து போனது
நேற்றிருந்த உறவு ஒன்று இன்று முடிந்து போனது
பார்த்திருந்த மரணம் பரிதவிக்கச் செய்தது
பேச்சிழந்து புலம்புகின்றோம் – புலம்பியொரு
வார்த்தை உன்னிடத்தில் கேட்கத் துடிக்கின்றோம்
கண்ணிருக்க மணியில்லை காற்றிருக்க உயிரில்லை
இங்கே உறவிருக்க நீ அருகிலில்லை

அன்னாரின் மறைவினால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!!!

கிராம அலுவலர்கள்
பச்சிலைப்பள்ளி

நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

மலர்வு
12
*
10
*
1929



உதிர்வு
25
*
08
*
2019

பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர்
திரு.சி.வதனராசா அவர்களின் அன்புத்தாயார்

அமரர்

# சின்னத்தம்பி சொர்ணலட்சுமி

## (தம்பகாமம் - பளை)



ஆலம் விழுதுகள் போல்
ஆயிரம் உறவு கொண்டு
குடும்ப உறவுகள் வீழ்துவிடாதிருக்க
வேரேன இருந்தீரே !
மாயப் புயல்வடிவில்
காலனவன் இன்னுயீர் பறிக்க
சோகத்தை தந்து விட்டு
சொல்லாமல் சென்றதென்ன?
நல்வழிகள் காட்டி எம்
மக்கள் சமூகத்துக்கு
ஒளிகொடுத்த தீபமே
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

**ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!**

-நெறியாளர்களும், பணியாளர்களும்-
பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்கம்,
பளை

சாயிஸ்தான் கண்டி வீதி மிருசுவில் 0778776784



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
12
★
10
★
1929



உதிர்வு
25
★
08
★
2019

எமது விஷேட காணி மத்தியஸ்தர் சபை உறுப்பினர்
சின்னத்தம்பு வதனராசா அவர்களின் அன்புத் தாயார்

## அமரர்– சின்னத்தம்பு சொர்ணலட்சுமி
## தம்பகாமம், பளை

ஆலமரம் போல் இருந்தே அனைவருக்கும்
நிழல் தந்தீர் அவனியில் நாம் எல்லாம்
அன்புடன் வாழவே ஆறுதல் தருவீர்
அம்மா என்று ஆசையுடன் அழைக்கவே அவனியில் இல்லை
என அனைவரும்கதறி அழுகின்றோம் –
பாசமாய் மொழி பேசும்உங்கள் சிரித்தமுகம்
காணாது தவிக்கின்றோம் தரணியிலே–
சற்று நேரத்திலே காலன் உம்மைபிரித்த செய்தி கேட்டே
நீங்காத உங்கள் நினைவுகளால் மௌனித்து விட்டோம்–

அன்னாரின் மறைவினால் பீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும்
குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!!! சாந்தி!!! சாந்தி!!!

தவிசாளர், உறுப்பினர்கள்
விஷேட காணி மத்தியஸ்தர் சபை
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி...!



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1929 | 2019 |
| 10 | 08 |
| 12 | 25 |

விழிகள் கரைகின்றன.
வேதனை நெஞ்சை முட்டுகிறதே ! ...
ஓடி ஓடித் திரிந்து உலாவிய இதயம்
நிரந்தரமாய் உறங்கியதேன்?
உம் பிரிவின் துயரச் செய்தி கேட்டு
காற்று வீச மறுக்கிறதே!
வாய்பேச மறுக்கிறதே!
உம் பாசத்தால்
கவர்ந்த உள்ளங்கள் இன்று
கண்ணீரில் மிதப்பதைத்
தவிர்க்க ஒரு கணம்

அமரர்
## சின்னத்தம்பு சொர்ணலெட்சுமி

**ஓம் சாந்தி சாந்தி!!!**

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிராத்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்
பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவுசங்கம்.
பளை.

நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்

திரு. சி. தர்மராசா அவர்களின் அன்புத் தாயார்

## அமரர் சின்னத்தம்பி

## சொர்ணலட்சுமி

வையகத்துள் 12.10.1929

வானகத்துள் 25.08.2019

காலமெலாம் எம் நெஞ்சினில்
கனதியாய் உறைகின்றவரே...

நேசம் கொண்ட நெஞ்சங்கள்
பாசமுடன் பரிதவிக்க
பாரைவிட்டுப் பறந்ததேனோ...!

பாச உறவுகள் பரிதவிக்க
பறந்தோடிச் சென்றதேனோ...!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி.! ஓம் சாந்தி..!! ஓம் சாந்தி...!!!

தங்கள் பிரிவால் துயருறும்
நலன்புரிச் சங்கம், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி

Print@Mickey-Chava



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்வு
12 - 10 - 1929

உதிர்வு
24 - 08 - 2019

## அமரர்
## திருமதி சின்னத்தம்பு சொர்ணலட்சுமி
### அவர்கள்

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் (யா/மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி) விவசாய பாட ஆசிரியரும், தென்மராட்சி கல்வி வலயத்தின் உதவிக்கல்விப்பணிப்பாளருமாகிய திரு.சி.தர்மராசா அவர்களின் பாசமிகு தாயார் இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

அதிபர்,
உபஅதிபர், ஆசிரியர்கள்,
கல்விசார ஊழியர்கள்.

யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
(யா/மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்றி நவிலல்

எங்கள் தாயார் எம்மை விட்டுப் பிரிந்து வேளையில் உடன் வந்து உதவியோருக்கும் அனுதாபங்கள். ஆறுதல் வார்த்தைகளை நேரில் தெரிவித்து துயரில் பங்கெடுத்த நல்ல உள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டும் மலர் வளையங்கள் சார்த்தியும் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அன்பு நெஞ்சங்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தைகள் கூறி துக்கம் பகிர்ந்து கொண்ட உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பலவழிகளில் உதவியோருக்கும் ஈமைக் கிரிகைகளினை நடத்திய குருக்கள் அவர்களுக்கும் மயானத்தில் நின்று உதவியோருக்கும் அந்தியேட்டி சபண்டீகரணக் கிரிகைகளை நிறைவேற்றிய புரோகிதர்களுக்கும் இம் மலரினைத் தொகுத்து வெளியிட்ட அச்சகத்தினருக்கும் மனமுவந்த நன்றிகளினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி.

குடும்பத்தினர் .


தம்பகாமம்
பளை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச வழி படம்




✱ அமரர்களினை குறிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சுப்பதிப்பு- [illegible] அச்சகம் - பளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org